ஆ.பெ. உரிமைக்காக உயிரை விடுவோம் உள்ளம் கலங்கமாட்டோம்
உலகம் திரண்டு எதிர்த்தாலும் உறுதி குலையமாட்டோம் 2

ஆண். அன்பு எங்கள் தேசம் பக்குவம் அஞ்சாமை வேத தத்துவம்
பெண் . அடிமை கொண்டு ஆழ எண்ணிடோம் ஆதிக்கத்தை எதிர்ப்போம்
அவர் ஆணவத்தினை அழிப்போம்
ஆண் . வஞ்சகரை வணங்கமாட்டோம் வலுவிழந்து உறங்கமாட்டோம்
பெண் . வஞ்சகரை வணங்கமாட்டோம் வலுவிழந்து உறங்கமாட்டோம்
ஆ.பெ . நாளும் பொழுதும் நம் செந்தமிழ் நலம் நாடுவோம்

பெண் . ஆதி அந்தம் அற்ற செந்தமிழ் அரம் காத்து நின்ற பைநஆதமிழ்
ஆண் . நீதி அற்ற வெறியர் கையில் நலிந்து மெலிந்து இறப்பா அதை
நம்ம தலைமுறை பொறுப்பா
பெண் . ஆவி தன்னில் ஆசையில்லை அடிமை வாழ்வில் வாசமில்லை
ஆண் . ஆவி தன்னில் ஆசையில்லை அடிமை வாழ்வில் வாசமில்லை
ஆ.பெ . பாயும் புலியாய் மாறி அடிமை பயம் நீக்குவோம்

ஆண். அழியும் நாளை நம் தேசமே அழியாதது தன் மானமே
பெண் . பழியம் இழிவும் உலகம் சொன்னால் பைந்தமிழுக்கு மதிப்பா
அது படைத்த இறைவன் விதிப்பா
ஆண் . படை கண்டு பயந்திட மாட்டோம் பலம் கண்டு மிரண்டிடமாட்டோம்
பெண் . படை கண்டு பயந்திட மாட்டோம் பலம் கண்டு மிரண்டிடமாட்டோம்
ஆ.பெ . பச்சை ரத்தம் ஓடும் வரை போராடுவோம்

ஆ.பெ. உரிமைக்காக உயிரை விடுவோம் உள்ளம் கலங்கமாட்டோம்
உலகம் திரண்டு எதிர்த்தாலும் உறுதி குலையமாட்டோம் 2